உங்களுக்கு 25 முதல் 45 வயதா?

உங்களுக்காகவே ஒரு இணையதளம்!

பெண்கள் சில, பல காரணங்களுக்காக தாங்கள் பார்த்துக் கொண்டிருந்த வேலையை விட்டுவிடுகிறார்கள். பிறகு, மீண்டும் வேலை தேடுவதில் பல பிரச்னைகள். இவர்களுக்கு கைகொடுக்க முன்வருகிறது, 'அவ்தார் ஐ வின்' நிறுவனம். இந்தியப் பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க தொடங்கப்பட்டுள்ள முதல் நிறுவனம் இது!

இந்த நிறுவனத்தின் ஸ்பெஷல் என்ன வென்றால் பெண்களுக்கு வசதியாக விருப்ப நேர வேலை, பகுதி நேர வேலை என 8 வகையான வேலைகளைத் தேடித் தருகின்றனர். அவ்தார் ஐ வின் நிறுவனத்தின் 10ம் ஆண்டை முன்னிட்டு, அடுத்த பரிமாணமாக, வேலை வாய்ப்பு இணையதளத்தை தொடங்கியுள்ளனர்.

இந்த நிறுவனத்தை உருவாக்கியிருப்பவர், சவுந்தர்யா ராஜேஷ். அவரிடம் பேசினோம்...

''என்னோட சொந்த ஊர் புதுச்சேரி. சென்னை சிட்டி வங்கியில் பணியாற்றி வந்தேன். டெலிவரிக்கு பிறகு என்னால் உடனடியாக வேலையை தொடர முடியவில்லை. குழந்தையை கவனிக்கவே நேரம் சரியாக இருந்தது. சில ஆண்டுகளுக்கு பின், மீண்டும் வேலைக்குப் போக நினைத்து வேலையை தேட ஆரம்பித்தேன். ஆனால் 'இத்தனை நாள் கேப் விழுந்து விட்டது. மீண்டும் உங்களால் எப்படி வேலையை தொடர்ந்து செய்ய முடியும்? எக்ஸ்பீரியன்ஸ் குறைகிறதே' என காரணம் காட்டி என் விண்ணப்பத்தை நிராகரித்தனர்.

தேடிய வேலை கிடைக்கவில்லை, கிடைத்த வேலையை செய்யலாம் என்று எம்ஓபி வைஷணவ் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றத் தொடங்கினேன். வேலை கிடைத்தாலும், நிராகரிக்கப்பட்ட அந்த அனுபவம், அந்த வெறி எனக்குள் இருந்துகொண்டே இருந்தது. இதைப் போல் திறமையுள்ள பெண்கள் எத்தனை எத்தனை பேர் நிராகரிக்கப்பட்டிருப்பர் என்று தோன்றியது. அந்த எண்ணத்தில் பிறந்ததுதான், 'அவ்தார் ஐ வின்' நிறுவனம்.

இந்த நிறுவனத்தை 2000ம் ஆண்டு டிசம்பர் 3ஆம் தேதி தொடங்கினேன். விருப்ப நேர வேலை செய்ய விரும்பும் பெண்களைத் தேடினேன். சென்னை, மதுரை, கோவை போன்ற பெருநகரங்களுக்குச் சென்று இதுபற்றி விசாரித்தேன். அதோடு எந்த கம்பெனியில் என்ன வேலை காலியாக இருக்கிறது என்ற தகவல்களையும் திரட்ட ஆரம்பித்தேன்.

ஐ.டி., பிபிஓ, பேங்க், கன்சல்டன்சி மற்றும் சில துறைகளில் இந்தியாவின் டாப் 45 நிறுவனங்களுக்கு சென்று அவர்களுக்கு எந்தவகையான எம்ப்ளாயீஸ் தேவை என்று ஆய்வு நடத்தினேன். இதில், 23 சதவீத நிறுவனங்கள் விருப்ப நேர வேலை பார்க்கும் பெண்களை எதிர்பார்த்தார்கள். இந்தத் தகவல், இந்த சேவையில் என் ஆர்வத்தை அதிகரித்தது.

அவ்தார் ஐவின் நிறுவனம், வேலையை தொடர முடியாமல் இருக்கும் 25 முதல் 45 வயது வரையிலான பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. முதலில் இவர்களால் என்ன செய்ய முடியும். எந்த வேலைக்கு இவர்கள் சரியானவர்கள் என்று அவர்களிடம் பேசித் தெரிந்து கொள்வோம். பகுதிநேர வேலை, விருப்ப நேர வேலை, இணையதள வேலை, டெலி ஓர்க், வீட்டிலிருந்து வேலை செய்ய என பல வகையிலான வேலைகளைத் தேடித் தருகிறோம்'' என்ற சவுந்தர்யா ராஜேஷ், ''இதற்காக எங்கள் நிறுவனம் சார்பாக எந்த ஒப்பந்தமும் இல்லை, எந்த கட்டணமும் இல்லை' என்று ஆச்சரியப்பட வைத்தார்!

''தாய்மையடைந்த பின் பெண்கள் மீண்டும் வேலைக்குச் செல்ல வேண்டுமென்றால் குடும்பம், வேலை கொடுக்கும் நிறுவனங்கள், சமூகம் என மூன்று தரப்பினரின் ஆதரவு தேவை. இவர்கள் பெண்களுக்கு வாய்ப்புகள் கொடுக்க முன் வரவேண்டும்'' என்கிறார் சவுந்தர்யா.

அவ்தார் ஐ வின் நிறுவனத்தின் இணையதள முகவரி: www.avtariwin.com

- தீபா.